**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: கொத்துகோவில் |
| Preliminary Register : CC.103/2020 | Age :63 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW7/ PW-7 | |
| Name : முருகேசன்,, உதவி ஆய்வாளர்(ஓய்வு) | Religion : |
| Father's/Husband's Name : கோபால் | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 27.02.2026.**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1ம் எதிரி ஆஜர். 2வது எதிரி இறப்பு 3வது எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 கு.வி.மு.ச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.04.2020 ஓய்வுபெற்று தற்போது கொத்துகோவில் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கடந்த 16.08.2016ம் தேதி திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 அரிதாஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடத்த புகாா

மனுவை பெற்று மனு எண் 238/2016 என பதிவு செய்டு மேற்படி மனுவை விசாரித்து 20.08.2016 அன்று இரவு 20.30 மணிக்கு நிலைய குற்ற எண். 301/2016 ல் சட்டபிரிவுகள் 294(பி), 323, 427, 506(2) இ.த.ச-வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். (**மேற்படி நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 21.08.2016 ம் தேதி காலை 9 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பாலகிருஷ்ணன் மற்றும் பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்பு அன்றைய தினம் காலை 9.45 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த பிளாஸ்டிக்தூள் 5 ஐ மாதிரி துண்டுகள் ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் பாலகிருஷ்ணன், பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகள் இருவரிடமும் கையொப்பம் பெற்றேன். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் தடயபொருளான பிளாஸ்டிக் மாதிரி துண்டுகள் 5 அ.சா.பொ.1 வரிசை ஆகும்.** பின்பு மேற்கண்ட சாட்சிகள் பாலகிருஷ்ணன், பாஸ்கர் இருவரையும் தனித்தனியாக விசாரித்தேன். பின்பு சம்பவ சாட்சிகள் அரிதாஸ், சுப்பிரமணியன், ராஜா ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகள் வழக்கு சம்பவத்தைப்பற்றி தெரிவாகவும் விளக்கமாகவும் என் வாக்குமூலத்தில் உள்ளதுபடி கூறினார்கள். மேற்படி சாட்சிகள் விசாரணையிலும் எனது புலன் விசாரணையிலும் வழக்கு சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இந்த வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது மேற்படி எதிரிகள் மூவரும் தஞ்சை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை

மேற்கொள்ளப்படவில்லை. பின்பு வழக்கின் தடயப்பொருளை படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த **படிவம் 95 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு 30.09.2016 ம் தேதி திருப்பனந்தாள் அரசு மருத்துவமனை சென்று அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரதீப்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி அ.சா.1 க்கான காயச்சான்று பெற்று வந்தேன். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக 30.09.2016 ம் தேதி சட்ட பிரிவுகள் 294(பி), 323,427, 506(2) இ.த.ச-வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் ஒரு 10 கி.மீ இருக்கும். ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் சென்றால் 10 நிமிடத்தில் சென்று விடலாம். சம்பவ நாள் 16.08.2016 நேரம் 23.30 மணி. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம் என்பது 20.08.2016 20.30 மணி. கலம் எண்.8 ல் காலதாமத்திற்கான காரணம் வாதியால் தாமதம் என்று குறிப்பிட்டுள்ளேன். மனுரசீது போடப்பட்டு பின்பு விசாரிக்கப்பட்டதால் தாமதம். மனுரசீது போட்டபின்பு நான் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல அ.சா.1 யை விசாரித்து வழக்கு பதிவு செய்தேன். இந்த வழக்கின் மனுரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை தாக்கல் செய்யாததிற்கு தனிப்பட்ட காரணம் ஒன்றும் இல்லை. 31.08.2016 ம் தேதி காலை 10.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். புகாரில் சம்பவம் யார் யாருக்கு தெரியும் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் வாகனத்தின் சேதமதிப்பு ரூ.5000/- என்று எழுதி ஒயிட்னரால் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் புகார்தாரரின் கையொப்பத்திற்கு மேல் 2 இன்ஞ் இடைவெளி உள்ளது என்றால் சரிதான்.

அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் இடையே நிலசம்மந்தமான பிரச்சனை உள்ளது என்று விசாரணையில் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். புகாரில் முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடந்தது வீட்டின் வரண்டாவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரம் இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர், மாதிரி வரைபடத்திலும் சம்பவ இடம் வீட்டு வாசல் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் ஆவணப்பொருளான இருசக்கர வாகனத்தினை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தூள் என்பதும் துண்டு என்பது வெவ்வேறு வார்த்தைகள் என்றால் சரிதான். எனது விசாரணையில் அ.சா.1 வாக்குமூலத்தில் உருட்டுக்கட்டையால் எனது இடது தோல்பட்டையில் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் அ.சா.1யிடமிருந்து புகார் பெறப்படவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட புகாரை வைத்து எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் இந்த வழக்கு ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றாலும் இந்த வழக்கு கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் பிளாஸ்டிக் துண்டுகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் இந்த வழக்கின் தடயப்பொருளான பிளாஸ்டிக் தூள் மற்றும் துண்டு வெளியே எளிதாக கிடைக்கக்கூடிய பொருள் என்றாலும் சரியல்ல. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கினை நான் சரியாக புலன்விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- P. Rangeswari,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**